# அறிவித்தல் இல R/2025/05

## வடக்கு மாகாண திணைக்களங்களுக்கு சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான (முழு நேரக்கடமை) ஆட்சேர்ப்பு

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் NP/02/02/CS/Gen/2019ம் இலக்க, 2025.06.26ம் திகதிய கடிதம், மற்றும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A14/PPSC/Legal/2025ம் இலக்க 2025.07.18ம் திகதிய அனுமதி ஆகியவற்றுக்கமைய, பின்வரும் திணைக்களங்களுக்கு சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் (முழு நேரக்கடமை) ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய, இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். தகைமைபெறும் விண்ணப்பதாரிகளுக்காக நேர்முகப்பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுச் சபையால் நடாத்தப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.08.22 ஆகும்

01. நிரப்பப்பட வேண்டிய திணைக்கள மற்றும் வெற்றிடங்களுக்கான விபரம்

| அலுவலகம் | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு செய்யவுள்ள எண்ணிக்கை |
|---|---|
| ஆளுநர் செயலகம் | 01 |
| பிரதம செயலாளர் செயலகம் | 01 |

02. ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரை, இவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

03. தகைமைகள்

பொதுவான தகைமைகள்:-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தை உள்ளவராகவும், உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும், பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளப் போதுமான உடற்தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**(iii)** விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்பதாரி அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தில் பிறந்திருக்க வேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். (அக்காலப்பகுதிக்கான நிரந்தர வதிவிடத்தை நிரூபிப்பதற்கான ஆதாரமொன்றை நேர்முகத்தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்)

04. **வயது** :- விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதி அன்று 22 **வயதிற்கு** குறையாதவராகவும் 45 **வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. **கல்வித் தகைமைகள்:-**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டமாணி பட்டத்தினை பெற்றிருப்பதுடன் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல் வேண்டும்

அல்லது

இலங்கை சட்ட கல்லூரியில் மூன்றாண்டுகள் சட்டக் கல்வியை பூர்த்தி செய்திருப்பதுடன் அதற்கான இறுதி பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன், இலங்கை உச்ச நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) சட்டத்தரணியாக ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

06. சம்பளம் :-

இப்பதவிக்கான நிலையான கொடுப்பனவாக, (மாதாந்தச் சம்பளம்) ரூபா. **99,950/=** வழங்கப்படும்.

07. **ஆட்சேர்ப்பு முறைமை**

இப்பதவிக்கான ஆட்சேர்ப்பானது, மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களினை நிரப்பும் நோக்குடன் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1.1 தங்கள் முழுமையான விபரங்கள் அடங்கிய சுயவிபர விண்ணப்பத்தினை சுயமாக தயாரித்து **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1.2 விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“NP/07/10/01/189”** என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.07.28

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்